# <u>தூத்துக்குடி மாநகராட்சி</u>
# <u>கூட்டப்பொருள்</u>

**2021**ஆம் ஆண்டு ஜனவரி மாதம் **22** ம் நாள் காலை **11.00** மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## <u>பொருள்</u>

| | | |
|---|---|---|
| 22.01.2021 | **1)** தூத்துக்குடி நகராட்சி நிலையில் இருந்து மாநகராட்சி நிலைக்கு தரம் உயர்த்தப்பட்டு **05.08.2008** முதல் மாநகராட்சியாக செயல்பட்டு வருகிறது. மாநகராட்சிப் பணி விதிகளில் உதவி செயற் பொறியாளர் (திட்டம்) என்ற நிலையில் பணியிடம் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை, எனினும் மாநகராட்சி பணி விதிகளுக்கு தெளிவுரை வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்ட அரசு ஆணை எண். **140** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் **27.05.97**ல் நகரமைப்பு ஆய்வாளர் நிலைகளில் பணிபுரிந்து வரும் பணியாளர்களை அப்பணியாளர்களின் பணி மூப்பு அடிப்படையில் பட்டயப்படிப்பு தேர்ச்சி பெற்றுள்ளவர்கள் எனில் உதவி செயற் பொறியாளர் (திட்டம்) நிலையிலானப் பணியிடத்திற்கும் பதவி உயர்வு பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.<br>இந்நிலையில் தூத்துக்குடி நகராட்சி நிலையில் இருந்து மாநகராட்சி நிலைக்கு தரம் உயர்த்தப்பட்ட பின்னர் அரசு ஆணை எண். **48** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் **22.05.2012**ல் ஏற்கனவே நகராட்சி நிலையில் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களை தொடர அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. இதன்படி தொடர் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் உதவி நகரமைப்பு அலுவலர் (உதவி செயற் பொறியாளர் (திட்டம்) நிலைக்கு நிகரானப் பணியிடம்) நிலையில் ஒரு பணியிடமும் அடங்கும் இப்பணியிடம் மாநகராட்சி நிலைக்கு தரம் உயர்த்தப்பட்ட பின்னர் நாளது தேதி வரை பூர்த்தி செய்யப்படவில்லை. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். **861/2015**/எம்.சி.அ**1**/நாள் **24.07.2015**ன் வாயிலாக வெளியிடப்பட்டுள்ள தெளிவுரைகளில் நிரந்தரமாக அனுமதிக்கப்பட்டுள்ள பணியிடங்களில் ஏற்படும் காலிபணியிடங்களை பொறுத்தமட்டில் பணியிடம் புதுப்பிக்கும் ஆணைகள் (Reviva; of Posts) பெறத் தேவையில்லை எனத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் இம்மாநகராட்சியில் நகரமைப்பு பிரிவில் நகரமைப்பு ஆய்வாளராக பணிபுரிந்து பட்டய படிப்பு தேர்ச்சி | **1)**அலுவலககக் குறிப்பு **1** மற்றும் **2** ஒப்புதல் வழங்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | பெற்றதன் அடிப்படையில் தற்போது உதவி பொறியாளராக பணிபுரிந்து வரும் திரு. அ. இராமச்சந்திரன் என்பவர் மேற்படி காலியாக உள்ள உதவி நகரமைப்பு அலுவலர் (உதவி செயற்பொறியாளர் (திட்டம்) நிலைக்கு நிகரான பணியிடம்) பணியிடத்தில் தன்னை பதவி உயர்வு ஆணை வழங்குமாறு கோரி விண்ணப்பித்து இருந்தததை அடுத்து இவரது கோரிக்கை குறித்து ஆணை வழங்கிட உரிய கருத்துரு நகராட்சி நிர்வாகம் ஆணையர், சென்னை அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் எப்(1)/1503/2019) நாள் 19.02.2019 வாயிலாக அனுப்பி வைக்கப்பட்டது. தவிர இக்கருத்துதுருவிற்கு தொடர்ச்சியாக நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.எப்4/4359/2019 நாள் 01.08.2019 வாயிலாக கோரப்பட்ட கூடுதல் விவரங்களும் 26.08.2019ம் நாளை இவவலுவலகக் கடிதத்தின் வாயிலாக அனுப்பி வைக்கப்பட்டதனை பரிசீலனை செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். எப்4/4359/2019 நாள் 06.11.2019ல் தமிழ்நாடு மாநகராட்சி பொறிாளர் மற்றும் குடிநீர் வழங்கல் பணி விதிகள் 1996ன் படி உதவி செயற்பொறியாளர் (திட்டம்) பணியிடமானது வகுப்பு 2 பிரிவு 1 வகை 1 ஐச் சார்ந்த பணியிடம் ஆகும் எனவும் இதற்கு நியமன அதிகாரி அம்மாநகராட்சியின் ஆணையர் அவர்களே ஆவார் எனவும், இதன்படி இப்பணியாளரை உதவி செயற்பொறியாளர் (திட்டம்) ஆகப் பதவி உயர்வு வழங்கிட பணி விதிகளின் படியும் இது தொடர்பாக நிலுவையில் உள்ள நீதிமன்ற வழக்குகளில் இறுதி தீர்ப்புக்கு உட்பட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>தூத்துக்குடி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களது செயல்முறை ஆணை ந.க.எண். இ2/13135/2012 நாள் 02.11.2020ன் படி உதவிச் செயற் பொறியாளர் (திட்டம்) பணியிடத்திற்கு 2020–2021ம் ஆண்டுக்கான இறுதி பணி தேர்ச்சி பெயர் பட்டியல் கீழ்க்கண்டவ்வாறு வெளியிடப்பட்டுள்ளது. | |

| வ.எண் | பணியாளர் பெயர் | பதவி | பிறந்த தேதி | பணியில் சேர்ந்த நாள் | உதவி/இளநிலை பொறியாளர் பணியிடத்திற்கு பெயர் மாற்றம் செய்யப்பட்ட நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | திரு.அ. ராமச்சந்திரன் | உதவி பொறியாளர் | 27.03.1967 | 17.02.1992 | 16.12.2011 |
| 2 | திருமதி.க.காந்திமதி | ஊதவி பொறியாளர் | 01.06.1969 | 07.05.1997 | 16.12.2011 |

| | | |
|---|---|---|
| | உதவி செயற் பொறியாளர் (திட்டம்) பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்குவது தொடர்பாக வழக்குகள் எதுவும் நிலுவையில் இல்லை.<br>மேற்படி இறுதி செய்யப்பட்ட பணி தேர்ச்சி பெயர் பட்டியலில் வரிசை எண் 1ல் தெரிவிக்கப்பட்டுள்ள திரு.அ. இராமச்சந்திரன் என்பவர் பணியில் மூத்தவராகவும், உதவி செயற் பொறியாளர் (திட்டம்) நிலையிலான பணியிடத்திற்கு பதவி உயர்வு பெற தகுதி பெற்றவராகவும் உள்ளார். இவர் கடந்த 5 ஆண்டுகள் தண்டனை ஏதும் பெறவில்லை. தவிர இவர் மீது 8(2) விதிகளின் கீழ் குற்றச்சாட்டுகள் ஏதும் நிலுவையில் இல்லை.<br>நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். எப்4/4359/2019 நாள் 06.11.2019ல் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின் படி உதவி செயற் பொறியாளர் (திட்டம்) நிலையிலான பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1)மாமன்றம் உரிய ஒப்புதல் வழங்கலாம்<br>2)தூத்துக்குடி மாநகராட்சி சட்டப்பிரிவு எண். 106(2) (b) ன் படி உதவி செயற்பொறியாளர் பணியிடம் வகுப்பு II –ஐ சார்ந்த பணியிடம்ாகும். இப்பணியிடத்தினை பொறுத்தமட்டில் மாமன்ற ஒப்புதலுடன் தற்காலிக பதவி உயர்வு ஆணை பிறப்பித்தும் அதனை தொடர்ந்து அரசு உறுதியாக்க ஆணை பெறுதல் வேண்டும். எனவே திரு. அ. ராமச்சந்திரன் உதவி பொறியாளரை உதவி செயற் பொறியாளர் (திட்டம்) பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்கும் பொருட்டு விரிவான முன்மொழிவினை நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்கள் வழியாக அரசுக்கு அனுப்பி வைத்து அரசின் உறுதியாக்க ஆணை பெற மாமன்றம் உரிய ஒப்புதல் வழங்கலாம்.<br>(ந.க.எண்.இ2/13135/2012 | |
| | 2)தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட தஸ்நேவிஸ் நகர் மற்றும் அய்யர்விளை பகுதியில் சுமார் 200 குடித்தனங்கள் வசித்து வரும் நிலையில், அப்பகுதியானது மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பின் இந்நாள் வரை மாநகராட்சி சார்பாக எவ்வித சாலை வசதியும் ஏற்படுத்தப்படாமல் மேற்படி சாலையானது குண்டும், குழியுமாக வாகனங்கள் மற்றும் பொது மக்கள் போக்குவரத்திற்கும் மிகவும் சிரமமாக உள்ள நிலையில் மேற்கண்ட பகுதியில் சாலை வசதி அமைத்தல் மிகவும் அவசியமாகிறது. பொதுமக்களின் நலன் கருதி மேற்படி பகுதியில் புதிதாக பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணியினை ரூ. 21.30 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது. | 2)அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. |

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வடக்கு மண்டலத்திற்குட்பட்ட தஸ்நேவிஸ் நகர் மற்றும் அய்யர்விளைப் பகுதியில் பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளல். | 21.30 |
| | மொத்தம் | 21.30 |
| | எனவே பொதுமக்களின் நலன் கருதி மேற்படி பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணியினை மதிப்பீட்டு தொகை ரூ. 21.30 இலட்சத்தில் பொது நிதி மற்றும் அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் மூலம் வரப்பெற்ற வளர்ச்சி கட்டண நிதியின் கீர் பணிகள் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :**<br>1) மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மாநகராட்சி பொது நிதி மற்றும் அனுமதியற்ற மனைப்பிரிவுகளின் வரன்முறைப்படுத்துதல் வளர்ச்சிக் கட்டண நிதி மூலம் ஈடு செய்யவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.இ2/3117/2020 | |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள் 22.01.2021

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி